DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.** 301/2020

| | | |
|---|---|---|
| Name | : | திரு. பக்ருதீன் பாவா **Pw3** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of July 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்தில் இறந்த நபர் எனது உறவினர் என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை நேரான சாலை என்றால் சரியல்ல, சிறிது வளைவான சாலையாகும். லாரி நின்ற இடத்தின் மேல்பக்கம் ஒரு பேருந்து செல்லும் அளவிற்கு ரோட்டில் இடம் இருந்தது என்று சொன்னால் சரிதான். விபத்தில் இறந்த நபர் ஓட்டி சென்ற

வாகனம் ஹோண்டா ஷைன் இருசக்கர வாகனம் ஆகும். அந்த வாகனத்தில் டிஸ்க் பிரேக் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக, டிஸ்க் பிரேக் உள்ள வாகனத்தில் பிரேக் அடித்தவுடன் வாகனம் உடனே நின்றுவிடும் என்றால் சரிதான். நின்று கொண்டிருந்த லாரியில் எந்த வித முகப்பு விளக்குகளும் எரியவில்லை என்றும், அதனால் விபத்து ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் 15 அடி தூரத்தில் நின்று கொண்டிருந்த லாரியை பார்த்து பிரேக் பிடித்திருந்தால் இந்த விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் அது இரவு நேரம் என்பதாலும்,அங்கு மின் விளக்குகள் எதுவும் இல்லாத காரணத்தினாலும், லாரியில் எந்தவித விளக்குகளும் எரியாத காரணத்தினாலும் பிரேக் பிடிக்க வாய்ப்பு கிடையாது. விபத்தில் இறந்த நபருக்கு தலை, உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர் தலைக்கவசம் அணிந்து சென்றிருந்தால் காயங்களின் அளவு குறைந்திருக்கும் என்றால் சரிதான்.

விபத்தில் இறந்த நபர் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும்,அஜாக்கிரதையாகவும் இயக்கியதன் விளைவாக இந்த விபத்து ஏற்பட்டது என்றும், இறந்துபோன நபர் எனது உறவினர் என்ற காரணத்தினால் அவரது குடும்பத்தினருக்கு இழப்பீடு பெற்றுத்தரவேண்டும் என்ற காரணத்திற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக போலீசாருக்கு நான் தான் தகவல் சொன்னேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன ரஷீம் சாலைவிதிகளை கடைபிடித்து இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரிதான். லாரி டிரைவர் சிக்னல் போடாமல் சாலையின் வளைவு பகுதியில் நிறுத்தியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக லாரி டிரைவர்மீதுதான் இலத்தூர் போலீசார் வழக்கு பதிவுசெய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi